

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (29.8.2025) தலைமைச் செயலகத்தில், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் ஒய்வு பெறுவதையொட்டியும், தீ ஆணையத்தின் (Fire Commission) தலைவராக நியமிக்கப்பட்டதை யொட்டியும் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (29.8.2025) தலைமைச் செயலகத்தில், முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா, மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர்/இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ளதை யொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### கொளத்தூர், கபாலீஸ்வரர் கலை – அறிவியல் கல்லூரிக்கு குத்தகைக்கு இடம் வழங்கியது தொடர்பான வழக்கு:

# ‘கோவில் நிதியை கல்விக்காகப் பயன்படுத்தினால் என்ன தவறு?’

## உச்சநீதிமன்றம் கேள்வி! வழக்கை தள்ளுபடி செய்தது!

சென்னை,ஆக.30-

கொளத்தூர், கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டிட கொளத்தூர் சோமநாத சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான நிலத்தினை 25 வருட குத்தகைக்கு சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயிலுக்கு வழங்குவது தொடர்பாக இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அவர்களால் ஆட்சேபணை கோரி வெளியிடப்பட்ட விளம்பர அறிவிப்பை எதிர்த்து டி.ஆர். ரமேஷ் என்பவர் தொடர்ந்த வழக்கு (W.P. 29684/2024) கடந்த 3.10.2024 அன்று மாண்புமிகு நீதியரசர் தண்டபாணி அவர்களால் தள்ளுபடி செய்யப்பட்டது.

மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து டி.ஆர். ரமேஷ் தொடர்ந்த மேல்முறையீட்டு மனு WA 105/ 2025 மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் மாண்புமிகு நீதியரசர்கள் ஆர். சுப்பிரமணியம் மற்றும் சி. குமரப்பன் ஆகியோர் அடங்கிய அமர்வில் கடந்த 24.2.2025 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி வழக்கு தீர்ப்புக்கு எதிராக மாண்பமை உச்சநீதிமன்றத்தில் டி.ஆர். ரமேஷ் என்பவர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு இன்று (29.08.2025) விசாரணைக்கு வந்தது. இவ்விசாரணையின் போது உச்சநீதிமன்ற நீதியரசர்கள் விக்ரம்நாத் மற்றும் சந்தீப் மேத்தா ஆகியோர் திருக்கோயில் மூலம் கல்லூரி நடத்தப்படுவது நல்ல நோக்கம் தானே, இதில் தவறேதுமில்லை எனவும், பொதுமக்கள் நலன்கருதி தானே நடத்தப்படுகிறது, அதனை தடுக்க நீங்கள் யார், இதனால் உங்களுக்கு என்ன பாதிப்பு என்று கேட்டு வழக்கை தள்ளுபடி செய்தனர்.

### தமிழ்நாடு முதலமைச்சரின் கனவை நனவாக்கும் வகையில்

# கோவை மாநகரத்தில் “மாஸ் கிளீனிங்” பணி!

## ஒரே நேரத்தில் 50க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் பங்கேற்பு!

*கோவை, ஆக. 31-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவை நனவாக்கும் வகையில் கோவை மாநகராட்சி பொது சுகாதார குழு தலைவர் பெ.மாரிசெல்வன் தலைமையில் காந்திபுரம் வெளியூர் பேருந்து நிலையத்தில் 50 க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் ஒரே நேரத்தில் “மாஸ் கிளீனிங்” பணியில் ஈடுபட்டனர்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவை நனவாக்கும் வகையில் கோவை மாநகராட்சியை குப்பையில்லா மாநகராட்சியாக உருவாக்க திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது என்று கோவை மாநகராட்சி பொது சுகாதார குழு தலைவர் பெ.மாரி செல்வன் செய்தியாளர்களிடம் கூறினார்.*

*அவர் கூறியதாவது : கோவை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் சுகாதாரத்தை பேணும் வகையில், தூய்மை பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநகராட்சி பகுதிகளில் குப்பையில்லா மாநகராட்சியாக மாற்ற தினமும் சுத்தம் செய்யப்பட்டு வருகின்றது. இது தவிர ஒவ்வொரு பகுதியிலும் “மாஸ் கிளீனிங்” என்ற முறையில் அதிகளவிலான தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மைப்படுத்தப்படுகின்றது. இந்நிலையில் கோவை காந்திபுரம் வெளியூர் பேருந்து நிலையம் மற்றும் டவுன் பேருந்து நிலையத்தில் தினமும் பல லட்சக்கணக்கான பயணிகள் பயன்படுத்தி வரும் நிலையில் 26.08.2025 செவ்வாய்க்கிழமை அன்று இரவு மாநகராட்சி சுகாதாரக்குழு தலைவர் ஆகிய எனது தலைமையில், காந்திபுரம் பேருந்து நிலையத்தில் “மாஸ் கிளீனிங்” பணியில் 50 க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் ஈடுபட்டனர். பேருந்து நிலைய பகுதி முழுவதும் தண்ணீரில் பீச்சி அடிக்கப்பட்டும் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு தூய்மைப் படுத்தப்பட்டது.*

*இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வகையில் மக்களின் மனங்களில் நிலைத்து நிற்கும் திட்டங்களை தந்து தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் இந்தியாவின் நம்பர் 1 முதலமைச்சர், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர், தளபதி அவர்களின் கனவை நினைவாக்கும் வகையில் கோவை மாநகராட்சியை குப்பையில்லா மாநகராட்சியாகவும், தூய்மையான மாநகராட்சியாகவும் உருவாக்கி வருகின்றோம், இப்பணி எப்போதும் தொடரும் என்று கூறினார்.*

*இதில் மாமன்ற உறுப்பினர் வித்யா இராமநாதன், மாநகராட்சி நகர்நல அலுவலர் மரு.பூபதி, சுகாதார ஆய்வாளர் குணசேகரன், வட்டச்செயலாளர் இராமநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.*




# தி.மு.க.
# இளைஞர் அணி

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 2–இல் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதியிலும், மண்டலம் 9–இல் திருமங்கலம், கன்னியாகுமரி, குளச்சல் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளிலும் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 31.08.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | பூவிருந்தவல்லி | எம்.கே.என்.பேலஸ், சென்னை–திருவள்ளூர் சாலை, வேப்பம்பட்டு. |
| 05.09.2025 வெள்ளிக்கிழமை | காலை 10.00 மணி | திருமங்கலம் | கொடி மஹால், திருமங்கலம், மதுரை. |
| 06.09.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | கன்னியாகுமரி | ஐ.எம்.ஏ.மஹால் ஆசிரமம், சுசீந்திரம். |
| | மாலை 4.00 மணி | குளச்சல் | பிஸ்மி ஆடிட்டோரியம், பள்ளிவாசல் சாலை, குளச்சல். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 28-08-2025

கலைஞர் 100
1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


### தூத்துக்குடி மாவட்டம் – எட்டையாபுரம் வட்டம் – கருப்பூர் கிராமத்தில்

# தனியார் பட்டாசு ஆலையில் வெடி விபத்து - ஒருவர் பலி!

## உயிரிழந்தவர் குடும்பத்திற்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் நிதியுதவி!

சென்னை, ஆக. 31-

தூத்துத்குடி மாவட்டம், எட்டையாபுரம் வட்டம், கருப்பூர் கிராமத்தில் உள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

தூத்துக்குடி மாவட்டம், எட்டையாபுரம் வட்டம், கருப்பூர் கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலைக்கு அருகில் உள்ள தரிசு நிலத்தில் 29.08.2025 அன்று மாலை 03.00 மணியளவில் எதிர்பாராதவிதமாக தீ பிடித்து, பட்டாசு ஆலைக்குச் சொந்தமான இடத்தில் அமைக்கப்பட்டுள்ள பணியாளர்கள் தங்குமிடம் மற்றும் அருகில் உள்ள இடங்களுக்கு தீ பரவியதில் ஏற்பட்ட வெடிவிபத்தில் விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், விஸ்வநத்தம் கிராமத்தைச் சேர்ந்த திரு.கந்தசாமி (வயது 57) த/பெ.பெரிய வேலுசாமி என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில், உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு நான்கு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அவ்வறிவிப்பில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### அமைச்சர் அர.சக்கரபாணி பங்கேற்பு!

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

*கிருஷ்ணகிரி, ஆக. 31-*

*கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*



*கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைபடியும், கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான இளம் தலைவர் அவர்கள் ஆலோசனைப்படியும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட நிர்வாகிகளுடனான காணொலி காட்சி வாயிலான ஆலோசனைக் கூட்டம் இன்று (31.8.2025 - ஞாயிற்றுக் கிழமை) காலை 10,00 மணிக்கு சட்டமன்ற தொகுதி வாரியாக கீழ்க் கண்ட இடங்களில் நடைபெற உள்ளது.*

*இந்த கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், ஐந்து வாக்குச்சாவடிகளுக்கு ஒரு பொறுப்பாளர்கள் என நியமிக்கப்பட்டவர்கள் வாக்குச்சாவடி முகவர்கள் BLA 2, தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகள், ஒன்றிய மகளிர் அணி நிர்வாகிகள், ஒன்றிய மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் அனைவரும் இந்த காணொலி காட்சி வாயிலான கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*கூட்டம் நடைபெறும் இடம் : பர்கூர் சட்டமன்ற தொகுதி MKS மஹால் திருப்பத்தூர் மெயின் ரோடு போச்சம்பள்ளி ,ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி ராமச்சந்திர மஹால் சாமல்பட்டி பைபாஸ், கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி DCM மஹால் குப்பம்சாலை ,அரசு கலைக் கல்லூரி அருகில் கிருஷ்ணகிரி.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*





ஈரோடு மாநகரம் 17, 23 வது வார்டுகளில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமில் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு மனு அளித்தனர். பொதுமக்களிடம் வாங்கப்படும் மனுக்கள் சரியான முறையில் பதிவேற்றம் செய்யப்படுகிறதா என்பதை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை, அமைச்சர் சு.முத்துச்சாமி ஆய்வு செய்தார் . நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, துணை மேயர் வி.செல்வராஜ், 1ம் மண்டல தலைவர் ப.க.பழனிச்சாமி, மாமன்ற உறுப்பினர்கள் மல்லிகா நடராஜன், சுகந்தி தங்கமணி, புனிதா சக்திவேல், மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், பகுதி கழக செயலாளர் வி.சி. நடராஜன், வட்ட கழக செயலாளர் கே.சுப்பிரமணி, வி.கே.குமார், ஆதம்ஸ் இளங்கோ, அம்ஜத் பாஷா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.